1971 ஏப்ரல் 3]

திரு. தங்கமணி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

அட்டவணை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1971), திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பட வேண்டும்".

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்று ஏற்கனவே கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். பல்கலைக் கழகமாக இருக்கும் காரணத்தால் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்ற முறையில் எந்த விதமான தடங்கலும் இல்லாமல் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுதான் நோக்கம். இரண்டு கல்லூரிகளுக்கு மேலும் உயர்த்தலாம் என்ற வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். வெகு சீக்கிரத்தில் வெடரினரி காலேஜும் சேர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1971), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப் பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா, திருத்தப்பட்ட படி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் மாலை 4 மணிக்கு பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(இடைவேளைக்குப் பின்னர் மாலை 4 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது).

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஐ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.